ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# நாச்சியார் திருமொழி

ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு
(Aug 2003)

## நாச்சியார் திருமொழி

அல்லிநாள் தாமரை மேலாரணங்கினின்துணைவி*
மல்லி நாடாண்டமடமயில் – மெல்லியலாள்*
ஆயர்க்குலவேந்தனுகத்தாள்* தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

**முதல் திருமொழி**

தையொரு திங்களும் தரை விளக்கி * தண் மண்டலமிட்டு மாசி முன்னாள்*
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து * அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா!*
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி * உன்னையும் உம்பியையும் தொழுதேன்*
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை * வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.(2) 1.1

வெள்ளை நுண் மணல் கொண்டு தெருவணிந்து * வெள் வரைப்பதன் முன்னம் துறை படிந்து*
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து * முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா*
கள் அவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு * கடல் வண்ணண் என்பதோர் பேரெழுதி*
புள்ளினைவாய் பிளந்தான் என்பது ஓர் * இலக்கினில் புகவென்னை எய்கிற்றியே. 1.2

மத்த நல் நறுமலர் முருக்க மலர் கொண்டு * முப்போதும் உன்னடி வணங்கி*
தத்துவமிலி என்று நெஞ்சு எரிந்து * வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே*
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு * கோவிந்தன் என்பதோர் பேரேழுதி*
வித்தகன் வேங்கட வாணனென்னும் * விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே. 1.3

சுவரில் புராண! நின் பேர் எழுதி * சுறவ நற் கொடிகளும் துரங்கங்களும்*
கவரிப் பிணைக்களும் கருப்பு வில்லும் * காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா*
அவரைப் பிராயம் தொடங்கி* என்றும் ஆதரித்து எழுந்த என் தடமுலைகள்*
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து * தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே.1.4

வானிடை வாழும் அவ் வானவர்க்கு * மறையவர் வேள்வியில் வகுத்த அவி*
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து * கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப*
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று * உன்னித்து எழுந்த என் தடமுலைகள்*
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் * வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! 1.5

உருவுடையார் இளையார்கள் நல்லார்* ஓத்து வல்லார்களைக் கொண்டு * வைகல்–
தெருவிடை எதிர்கொண்டு* பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா*
கருவுடை முகில்வண்ணன் காயா வண்ணன்* கரு விளைபோல் வண்ணன் கமலவண்ணன்*
திருவுடை முகத்தினில் திருக் கண்களால்* திருந்தவே நோக்கு எனக்கருள் கண்டாய். 1.6

காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்* கட்டியரிசி அவல் அமைத்து*
வாயுடை மறையவர் மந்திரத்தால்* மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்*
தேசமுன் அளந்தவன் திரிவிக்கிரமன்* திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்*
சாயுடை வயிறும் என் தடமுலையும்* தரணியில் தலைப் புகழ் தரக்கிற்றியே. 1.7

மாசுடை உடம்பொடு தலை உலறி* வாய்ப் புறம் வெளுத்து ஒருபோதும் உண்டு*
தேசுடை திறலுடைக் காமதேவா!* நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்*
பேசுவது ஒன்று உண்டு இங்கு எம்பெருமான்* பெண்மையைத் தலையுடைத் தாக்கும் வண்ணம்*
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும்* இப்பேறு எனக்கு அருள் கண்டாய். 1.8

தொழுது முப்போதும் உன்னடி வணங்கி* தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்*
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே* பணிசெய்து வாழப் பெறுவிடில் நான்*
அழுது அழுது அலமந்த அம்மா வழங்க* ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய்*
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து* ஊட்டமின்றி துரந்தால் ஒக்குமே. 1.9

##கருப்புவில் மலர்க்கணைக் காமவேளை* கழலிணை பணிந்து அங்கு ஓர் கரியலற*
மருப்பினை ஓசித்துப் புள்வாய் பிளந்த* மணிவண்ணற்கு என்னை வகுத்திடு என்று*
பொருப்பு அன்ன மாடம் பொலிந்து தோன்றும்* புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை*
விருப்புடை இன் தமிழ் மாலை வல்லார்* விண்ணவர் கோன் அடி நண்ணுவரே. (2) 1.10

**இரண்டாம் திருமொழி**
## நாமம் ஆயிரம் ஏத்த நின்ற* நாராயணா நரனே* உன்னை–
மாமிதன் மகனாகப் பெற்றால்* எமக்கு வாதை தவிருமே*
காமன் போதரு காலமென்று* பங்குனிநாள் கடை பாரித்தோம்*
தீமை செய்யும் சிரீதரா!* எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. (2) 2.1

இன்று முற்றும் முதுகு நோவ* இருந்து இழைத்த இச் சிற்றிலை*
நன்றும் கண்ணுற நோக்கி* நாங்கொளும் ஆர்வந் தன்னைத் தணிகிடாய்*
அன்று பாலகனாகி* ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்!*
என்றும் உந்தனக்கு எங்கள் மேல் * இரக்கம் எழாதது எம் பாவமே. 2.2

குண்டு நீருறை கோளரீ!* மத யானை கோள் விடுத்தாய்!*
உன்னைக் கண்டு மாலுறு வோங்களை* கடைக் கண்களால் இட்டு வாதியேல்*
வண்டல் நுண் மணல் தெள்ளி* யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டோம்*
தெண் திரைக்கடல் பள்ளியாய்!* எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 2.3

பெய்யு மாமுகில் போல் வண்ணா!* உன் தன் பேச்சும் செய்கையும்*
எங்களை மையல் ஏற்றி மயக்க* உன்முகம் மாய மந்திரந்தான் கொலோ*
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு* உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம்*
செய்ய தாமரைக் கண்ணினாய் * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 2.4

வெள்ளை நுண் மணல் கொண்டு* சிற்றில் விசித்திரப்பட* வீதிவாய்த் –
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் அழித்தியாகிலும்* உன் தன் மேல் *
உள்ளம் ஓடி உருகல் அல்லால்* உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய்*
கள்ள மாதவா! கேசவா!* உன் முகத்தன கண்கள் அல்லவே. 2.5

முற்றிலாத பிள்ளைகளோம்* முலை போந்திலாதோமை*
நாள்தொறும் சிற்றில் மேலிட்டுக் கொண்டு* நீ சிறிதுண்டு திண்ணென நாமது –
கற்றிலோம்* கடலை அடைத்து அரக்கர் குலங்களை* முற்றவும் செற்று*
இலங்கையைப் பூசலாக்கிய சேவகா!* எம்மை வாதியேல். 2.6

பேத நன்கு அறிவார்களோடு* இவை பேசினால் பெரிது இன் சுவை*
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை* நீ நலிந்து என் பயன்?*
ஓதமா கடல் வண்ணா!* உன் மணவாட்டிமாரொடு சூழறும்*
சேது பந்தம் திருத்தினாய்!* எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 2.7

வட்டவாய் சிறு தூதையோடு* சிறு சுளகும் மணலுங் கொண்டு*
இட்டமா விளையாடு வோங்களைச்* சிற்றில் ஈடழித்து என் பயன்?*
தொட்டு தைத்து நலியேல் கண்டாய்* சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்*
கட்டியும் கைத்தால் இன்னாமை* அறிதியே கடல் வண்ணனே! 2.8

முற்றத்தூடு புகுந்து* நின்முகங் காட்டிப் புன்முறுவல் செய்து*
சிற்றிலோடு எங்கள் சிந்தையும்* சிதைக்கக் கடவையோ? கோவிந்தா*
முற்ற மண்ணிடம் தாவி* விண்ணுற நீண்டு அளந்து கொண்டாய்*
எம்மைப் பற்றி மெய்ப் பிணக்கு இட்டக்கால்* இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்? 2.9

##‘சீதைவாய் அமுதம் உண்டாய்!* எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று*
வீதிவாய் விளையாடும்* ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை*
வேதவாய்த் தொழிலார்கள் வாழ்* வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன்*
கோதை வாய்த் தமிழ் வல்லவர்* குறைவின்றி வைகுந்தம் சேர்வரே! (2) 2.10

**மூன்றும் திருமொழி**
##கோழி அழைப்பதன் முன்னம்* குடைந்து நீராடுவான் போந்தோம்*
ஆழியஞ் செல்வன் எழுந்தான்* அரவணை மேல் பள்ளி கொண்டாய்*
ஏழைமை ஆற்றவும் பட்டோம்* இனி என்றும் பொய்கைக்கு வாரோம்*
தோழியும் நானும் தொழுதோம்* துகிலைப் பணித்து அருளாயே. (2) 3.1

இது என் புகுந்தது இங்கு அந்தோ!* இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்*
மதுவின் துழாய்முடி மாலே!* மாயனே! எங்கள் அமுதே*
விதியின்மையால் அது மாட்டோம்* வித்தகப் பிள்ளாய்! விரையேல்*
குதி கொண்டு அரவில் நடித்தாய்!* குருந்து இடைக் கூறை பணியாய். 3.2

எல்லே ஈது என்ன இளமை* எம்மனைமார் காணில் ஒட்டார்*
பொல்லாங்கு ஈதென்று கருதாய்* பூங்குருந்து ஏறி இருத்தி*
வில்லால் இலங்கை அழித்தாய்!* நீ வேண்டியது எல்லாம் தருவோம்*
பல்லாரும் காணுமே போவோம்* பட்டைப் பணித்து அருளாயே. 3.3

பரக்க விழித்து எங்கும் நோக்கி* பலர் குடைந்தாடும் சுனையில்*
அரக்க நில்லா கண்ண நீர்கள்* அலமருகின்றவா பாராய்*
இரக்க மேல் ஒன்றும் இலாதாய்!* இலங்கை அழித்த பிரானே*
குரக்கு அரசு ஆவது அறிந்தோம்* குருந்து இடைக் கூறை பணியாய். 3.4

காலைக் கதுவிடுகின்ற* கயலொடு வாளை விரவி*
வேலைப் பிடித்து என் ஐமார்கள் ஓட்டில்* என்ன விளையாட்டோ?*
கோலச் சிற்றாடை பலவும் கொண்டு *நீ ஏறி இராதே*
கோலம் கரிய பிரானே!* குருந்து இடைக் கூறை பணியாய். 3.5

தடத்தவிழ் தாமரைப் பொய்கை* தாள்கள் எம் காலைக் கதுவ*
விடத் தேள் எறிந்தாலே போல* வேதனை ஆற்றவும் பட்டோம்*
குடத்தை எடுத்தேற விட்டு* கூத்தாட வல்ல எங்கோவே*
படிற்றை எல்லாம் தவிர்ந்து *எங்கள் பட்டைப் பணித்து அருளாயே. 3.6

நீரிலே நின்று அயர்க்கின்றோம்* நீதி அல்லாதன செய்தாய்*
ஊர் அகம் சாலவும் சேய்த்தால்* ஊழி எல்லாம் உணர்வானே!*
ஆர்வம் உனக்கே உடையோம்* அம்மனைமார் காணில் ஒட்டார்*
போர விடாய் எங்கள் பட்டை* பூங்குருந்து ஏறி இராதே. 3.7

மாமிமார் மக்களே அல்லோம்* மற்றும் இங்கு எல்லாரும் போந்தார்*
தூமலர்க் கண்கள் வளர* தொல்லை இராத் துயில்வானே*
சேமமேல் அன்றிது சால* சிக்கென நாம் இது சொன்னோம்*
கோமள ஆயர் கொழுந்தே!* குருந்து இடைக் கூறை பணியாய். 3.8

கஞ்சன் வலை வைத்த அன்று* காரிருள் எல்லில் பிழைத்து*
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்* நின்ற இக் கன்னியரோமை*
அஞ்ச உரப்பாள் அசோதை* ஆணாட விட்டிட்டு இருக்கும்*
வஞ்சகப் பேய்ச்சி பாலுண்ட* மசிமை இலீ! கூறை தாராய். 3.9

##கன்னியரோடு எங்கள் நம்பி* கரிய பிரான் விளையாட்டை*
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த* புதுவையர் கோன் பட்டன் கோதை*
இன்னிசையால் சொன்ன மாலை* ஈரைந்தும் வல்லவர் தாம் போய்*
மன்னிய மாதவனோடு* வைகுந்தம் புக்கிருப்பாரே. (2) 3.10

**நான்காம் திருமொழி**
##தெள்ளியார் பலர்* கைதொழும் தேவனார்*
வள்ளல் * மாலிருஞ்சோலை மணாளனார்*
பள்ளி கொள்ளும் இடத்து* அடி கொட்டிட*
கொள்ளும் ஆகில் * நீ கூடிடு கூடலே! (2) 4.1

##காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர்*
வாட்டமின்றி* மகிழ்ந்துறை வாமனன்*
ஓட்டரா வந்து * என் கைப்பற்றி*
தன்னொடும் கூட்டுமாகில்* நீ கூடிடு கூடலே! (2) 4.2

பூமகன்* புகழ் வானவர்*
போற்றுதற்கு ஆமகன்* அணி வாணுதல் தேவகி மாமகன்*
மிகு சீர்* வசுதேவர் தம்*
கோமகன் வரில் * கூடிடு கூடலே! 4.3

ஆய்ச்சிமார்களும்* ஆயரும் அஞ்சிட*
பூத்த நீள்* கடம்பு ஏறிப் புகப் பாய்ந்து*
வாய்த்த காளியன்மேல் * நடமாடிய*
கூத்தனார் வரில் * கூடிடு கூடலே! 4.4

மாட மாளிகை சூழ்* மதுரைப்பதி நாடி*
நந்தெருவின்* நடுவே வந்திட்டு*
ஓடை மா* மதயானை உதைத்தவன்*
கூடுமாகில் * நீ கூடிடு கூடலே! 4.5

அற்றவன்* மருதம் முறிய நடை கற்றவன்*
கஞ்சனை* வஞ்சனையில் செற்றவன்*
திகழும் * மதுரைப்பதி*
கொற்றவன் வரில் *கூடிடு கூடலே! 4.6

அன்று இன்னாதன செய்* சிசுபாலனும்*
நின்ற நீள்* மருதும் எருதும் புள்ளும்*
வென்றி வேல் விறல்* கஞ்சனும் வீழ*
முன் கொன்றவன் வரில் * கூடிடு கூடலே! 4.7

ஆவல் அன்புடையார்* தம் மனத்தன்றி மேவலன்*
விரைசூழ் * துவராபதிக் காவலன்*
கன்று மேய்த்து விளையாடும்*
கோவலன் வரில் *கூடிடு கூடலே! 4.8

கொண்ட கோல * குறளுருவாய்ச் சென்று*
பண்டு மாவலி தன்* பெரு வேள்வியில்*
அண்டமும் நிலனும்* அடி ஒன்றினால்*
கொண்டவன் வரில் * கூடிடு கூடலே! 4.9

பழகு நான்மறையின் பொருளாய்*
மதமொழுகு வாரணம்* உய்ய அளித்த*
எம் அழகனுர் * அணி ஆய்ச்சியர் சிந்தையுள்*
குழகனுர் வரில் * கூடிடு கூடலே! 4.10

##ஊடல் கூடல் * உணர்தல் புணர்தலை*
நீடு நின்ற* நிறைபுகழ் ஆய்ச்சியர்*
கூடலை * குழற்கோதை முன் கூறிய*
பாடல் பத்தும் வல்லார்க்கு* இல்லை பாவமே* (2) 4.11

**ஐந்தாம் திருமொழி**
##மன்னு பெரும் புகழ் மாதவன்* மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன் தன்னை*
உகந்தது காரணமாக* என் சங்கு இழக்கும் வழக்குண்டே?*
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்* பொதும்பினில் வாழும் குயிலே!*
பன்னி எப்போதும் இருந்து விரைந்து* என் பவள வாயன் வரக்கூவாய். (2) 5.1

வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட* விமலன் எனக்கு உருக் காட்டான்*
உள்ளம் புகுந்து என்னை நைவித்து* நாளும் உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்*
கள் அவிழ் செண்பகப் பூமலர் கோதி* களித்து இசை பாடுங் குயிலே*
மெள்ள இருந்து மிழற்றி மிழற்ருது* என் வேங்கடவன் வரக்கூவாய். 5.2

மாதலி தேர் முன்பு கோல் கொள்ள* மாயன் இராவணன் மேல்*
சரமாரி தாய் தலை அற்று அற்று வீழ* தொடுத்த தலைவன் வரவு எங்கும் காணேன்*
போதலர் காவில் புதுமணம் நாற* பொறிவண்டின் காமரம் கேட்டு*
உன் காதலியோடு உடன் வாழ் குயிலே!* என் கருமாணிக்கம் வரக்கூவாய். 5.3

என்பு உருகி இனவேல் நெடுங்கண்கள்* இமை பொருந்தா பல நாளும்*
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்* தோணி பெருது உழல்கின்றேன்*
அன்புடையாரைப் பிரிவுறு நோய் * அது நீயும் அறிதி குயிலே*
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடை* புண்ணியனை வரக்கூவாய். 5.4

##மென்னடை அன்னம் பரந்து விளையாடும்* வில்லிபுத்தூர் உறைவான் தன்*
பொன்னடி காண்பதோர் ஆசையினுல்* என் பொரு கயல் கண்ணிணை துஞ்சா*
இன் அடிசிலொடு பாலமுதூட்டி* எடுத்த என் கோலக்கிளியை*
உன்னுெடு தோழமை கொள்ளுவன் குயிலே!* உலகளந்தான் வரக் கூவாய். (2) 5.5

எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும்* இருடீகேசன் வலி செய்ய*
முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயும் முலையும்* அழகு அழிந்தேன் நான்*
கொத்தலர் காவில் மணித் தடம் கண் படை* கொள்ளும் இளங் குயிலே *
என் தத்துவனை வரக் கூகிற்றி ஆகில்* தலை அல்லால் கைம்மாறிலேனே! 5.6

பொங்கிய பாற் கடல் பள்ளி கொள்வானை* புணர்வதோர் ஆசையினுல்*
என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து* ஆவியை ஆகுலம் செய்யும் அங்குயிலே!*
உனக்கு என்ன மறைந்து உறைவு* ஆழியும் சங்கும் ஒண் தண்டும்*
தங்கிய கையவனை வரக்கூவில்* நீ சாலத் தருமம் பெறுதி. 5.7

சார்ங்கம் வளைய வலிக்கும்* தடக்கைச் சதுரன் பொருத்தம் உடையன்*
நாங்கள் எம்மில் இருந்து ஒட்டிய கச்சங்கம்* நானும் அவனும் அறிதும்*
தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும்* சிறுகுயிலே*
திருமாலை ஆங்கு விரைந்து ஒல்லைக் கூகிற்றியாகில்* அவனை நான் செய்வன காணே! 5.8

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்* பாசத்து அகப் பட்டிருந்தேன்*
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ்குயிலே!* குறிக்கொண்டு இது நீ கேள்*
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல்* பொன்வளை கொண்டு தருதல்*
இங்குள்ள காவினில் வாழக் கருதில்* இரண்டத்து ஒன்றேல் திண்ணம் வேண்டும். 5.9

அன்று உலகம் அளந்தானை உகந்து* அடிமைக்கண் அவன் வலி செய்ய*
தென்றலும் திங்களும் ஊடறுத்து* என்னை நலியும் முறைமை அறியேன்*
என்றும் இக்காவில் இருந்து இருந்து* என்னைத் ததர்த்தாதே நீயும் குயிலே!*
இன்று நாராயணனை வரக் கூவாயேல்* இங்குற்று நின்றும் துரப்பன். 5.10

##விண்ணுற நீண்டு அடிதாவிய மைந்தனை* வேற் கண் மடந்தை விரும்பி*
'கண்ணுற என்கடல் வண்ணனைக் கூவு* கருங்குயிலே! என்ற மாற்றம்*
பண்ணுறு நான்மறையோர் புதுவை மன்னன்* பட்டர்பிரான் கோதை சொன்ன*
நண்ணுறு வாசக மாலை வல்லார்* நமோ நாராயணாய என்பாரே! (2) 5.11

### *ஆறாம் திருமொழி*

##வாரணமாயிரம் * சூழ வலம் செய்து*
நாரண நம்பி* நடக்கின்றான் என்று எதிர்*
பூரண பொற்குடம்* வைத்துப் புறமெங்கும்*
தோரணம் நாட்ட* கனாக்கண்டேன் தோழீ! நான். (2) 6.1

நாளை வதுவை* மணமென்று நாளிட்டு*
பாளை கமுகு* பரிசுடைப் பந்தற்கீழ்*
கோளரி மாதவன்* கோவிந்தனென்பான் ஓர்*
காளை புகுத * கனாக்கண்டேன் தோழீ! நான். 6.2

இந்திரன் உள்ளிட்ட* தேவர் குழாமெல்லாம்*
வந்திருந்து என்னை* மகட்பேசி மந்திரித்து*
மந்திரக்கோடி உடுத்தி* மணமாலை*
அந்தரி சூட்ட* கனாக்கண்டேன் தோழீ! நான். 6.3

நால் திசைத் தீர்த்தம்* கொணர்ந்து நனிநல்கி*
பார்ப்பனச் சிட்டர்கள்* பல்லாரெடுத்தேத்தி*
பூப்புனை கண்ணி* புனிதனோடு என் தன்னை*
காப்பு நாண் கட்ட* கனாக்கண்டேன் தோழீ! நான். 6.4

கதிரொளி தீபம்* கலச முடனேந்தி*
சதிரிள மங்கையர்* தாம் வந்து எதிர்கொள்ள*
மதுரையார் மன்னன்* அடிநிலை தொட்டு*
எங்கும் அதிரப் புகுத* கனாக்கண்டேன் தோழீ!நான். 6.5

மத்தளம் கொட்ட* வரிசங்கம் நின்றூத*
முத்துடைத் தாமம்* நிரைதாழ்ந்த பந்தற்கீழ்*
மைத்துனன் நம்பி* மதுசூதன் வந்து*
என்னைக் கைத்தலம் பற்ற* கனாக்கண்டேன் தோழீ!நான். 6.6

வாய் நல்லார்* நல்ல மறையோதி மந்திரத்தால்*
பாசிலை நாணல் படுத்து* பரிதி வைத்து*
காய்சின மாகளிறு* அன்னான் என் கைப்பற்றி*
தீவலஞ்செய்ய* கனாக்கண்டேன் தோழீநான். 6.7

இம்மைக்கும் * ஏழேழ் பிறவிக்கும் பற்ருவான்*
நம்மை யுடையவன் * நாராயணன் நம்பி*
செம்மையுடைய* திருக்கையால் தாள்பற்றி*
அம்மிமிதிக்க * கனக்கண்டேன் தோழீ! நான். 6.8

வரிசிலை வாள்முகத்து* என்னைமார் தாம்வந்திட்டு*
எரிமுகம் பாரித்து* என்னை முன்னே நிறுத்தி*
அரிமுகன் அச்சுதன்* கைம்மேல் என் கை வைத்து*
பொரிமுகந்தட்ட* கனக்கண்டேன் தோழீநான். 6.9

குங்குமமப்பி* குளிர்சாந்த மட்டித்து*
மங்கல வீதி* வலஞ்செய்து மணநீர்*
அங்கு அவனோடும் உடன் சென்று* அங்கு ஆனைமேல்*
மஞ்சன மாட்ட* கனக்கண்டேன் தோழீ!நான். 6.10

##ஆயனுக்காக* தான் கண்ட கனவினை*
வேயர் புகழ் * வில்லிபுத்தூர்க்கோன் கோதைசொல்*
தூய தமிழ்மாலை* ஈரைந்தும் வல்லவர்*
வாயும் நன்மக்களை பெற்று * மகிழ்வரே. (2) 6.11

**ஏழாம் திருமொழி**
##கருப்பூரம் நாறுமோ?* கமலப்பூ நாறுமோ*
திருப் பவளச் செவ்வாய்தான்* தித்தித்து இருக்குமோ*
மருப் பொசித்த மாதவன் தன்* வாய்ச் சுவையும் நாற்றமும்*
விருப்புற்றுக் கேட்கின்றேன்* சொல்லாழி வெண்சங்கே! (2) 7.1

கடலில் பிறந்து* கருதாது* பஞ்சசனன்
உடலில் வளர்ந்து போய் * ஊழியான் கைத்தலத்து*
இடரில் குடியேறி* தீய அசுரர்*
நடலைப் பட முழங்கும்* தோற்றத்தாய் நற்சங்கே!* 7.2

தடவரையின் மீதே* சரற் கால சந்திரன்*
இடை உவாவில் வந்து * எழுந்தாலே போல*
நீயும் வடமதுரையார் மன்னன்* வாசுதேவன் கையில்*
குடியேறி வீற்றிருந்தாய்* கோலப் பெருஞ்சங்கே! 7.3

சந்திர மண்டலம் போல்* தாமோதரன் கையில்*
அந்தரம் ஒன்று இன்றி* ஏறி அவன் செவியில்*
மந்திரம் கொள்வாயே போலும்* வலம்புரியே*
இந்திரனும் உன்னோடு* செல்வத்துக்கு ஏலானே. 7.4

உன்னோடு உடனே* ஒரு கடலில் வாழ்வாரை*
இன்னார் இனையார் என்று* எண்ணுவார் இல்லை காண்*
மன்னாகி நின்ற* மதுசூதன் வாயமுதம்*
பன்னாளும் உண்கின்றாய் * பாஞ்ச சந்நியமே! 7.5

போய்த் தீர்த்தம் ஆடாதே* நின்ற புணர் மருதம்*
சாய்த் தீர்த்தான் கைத்தலத்தே* ஏறிக் குடிகொண்டு*
சேய்த் தீர்த்தமாய் நின்ற* செங்கண்மால் தன்னுடைய*
வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்* வலம்புரியே! 7.6

செங்கமல நாண்மலர் மேல்* தேன் நுகரும் அன்னம் போல்*
செங்கண் கருமேனி *வாசுதேவனுடய*
அங் கைத்தலம் ஏறி* அன்னவசம் செய்யும்*
சங்கு அரையா! உன்செல்வம்* சால அழகியதே! 7.7

உண்பது சொல்லில் * உலகளந்தான் வாயமுதம்*
கண் படை கொள்ளில்* கடல்வண்ணன் கைத்தலத்தே*
பெண் படையார் உன் மேல்* பெரும் பூசல் சாற்றுகின்ருர்*
பண்பல செய்கின்ருய்* பாஞ்ச சன்னியமே! 7.8

பதினூறும் ஆயிரவர்* தேவிமார் பார்த்து இருப்ப*
மதுவாயில் கொண்டாற் போல்* மாதவன் தன் வாயமுதம்*
பொது ஆக உண்பதனை* புக்கு நீ உண்டக்கால்*
சிதையாரோ உன்னூேடு* செல்வப் பெருஞ்சங்கே! 7.9

##பாஞ்ச சந்நியத்தை * பற்பநாபனூேடும் *
வாய்ந்த பெருஞ் சுற்றம் ஆக்கிய* வண்புதுவை*
ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான்* கோதை தமிழ் ஈரைந்தும்*
ஆய்ந்து ஏத்த வல்லார் *அவரும் அணுக்கரே. (2) 7.10

**எட்டாம் திருமொழி**
##விண் நீல மேலாப்பு* விரித்தாற் போல் மேகங்காள்*
தெண்ணீர் பாய் வேங்கடத்து *என் திருமாலும் போந்தானே?*
கண்ணீர்கள் முலைக் குவட்டில்* துளிசோரச் சோர்வேனை*
பெண்ணீர்மை ஈடழிக்கும்* இது தமக்கு ஓர் பெருமையே? (2) 8.1

மாமுத்த நிதி சொரியும்* மாமுகில்காள்* வேங்கடத்துச்
சாமத்தின் நிறங் கொண்ட* தாடாளன் வார்த்தை என்னே*
காமத் தீயுள் புகுந்து* கதுவப் பட்டு இடைக் கங்குல்*
ஏமத்து ஓர் தென்றலுக்கு* இங்கு இலக்காய் நான் இருப்பேனே. 8.2

ஒளி வண்ணம் வளை சிந்தை* உறக்கத்தோடு இவை எல்லாம்*
எளிமையால் இட்டு என்னை* ஈடழியப் போயின ஆல்*
குளிர் அருவி வேங்கடத்து *என் கோவிந்தன் குணம் பாடி*
அளியத்த மேகங்காள்!* ஆவி காத்திருப்பேனே. 8.3

மின் ஆகத்து எழுகின்ற* மேகங்காள்* வேங்கடத்துத்–
தன் ஆகத் திருமங்கை* தங்கிய சீர் மார்வர்க்கு*
என் ஆகத்து இளங் கொங்கை* விரும்பித் தாம் நாள் தோறும்*
பொன் ஆகம் புல்குதற்கு* என் புரிவு உடைமை செப்புமினே. 8.4

வான் கொண்டு கிளர்ந்து எழுந்த* மாமுகில்காள்!* வேங்கடத்துத்–
தேன் கொண்ட மலர்ச் சிதறத்* திரண்டு ஏறிப் பொழிவீர்காள்*
ஊன் கொண்ட வள்ளுகிரால்* இரணியனை உடல் இடந்தான்*
தான் கொண்ட சரிவளைகள்* தருமாகில் சாற்றுமினே. 8.5

சலங் கொண்டு கிளர்ந்து எழுந்த* தண் முகில்காள்!* மாவலியை–
நிலங் கொண்டான் வேங்கடத்தே* நிரந்து ஏறிப் பொழிவீர்காள்*
உலங்கு உண்ட விளங்கனிபோல்* உள் மெலியப் புகுந்து*
என்னை நலங் கொண்ட நாரணற்கு * என் நடலை நோய் செப்புமினே. 8.6

##சங்க மாகடல் கடைந்தான்* தண் முகில்காள்! * வேங்கடத்துச்–
செங்கண்மால் சேவடிக் கீழ்* அடி வீழ்ச்சி விண்ணப்பம்*
கொங்கை மேல் குங்குமத்தின்* குழம்பு அழியப் புகுந்து*
ஒரு நாள் தங்கும் ஏல் என்னுவி* தங்கும் என்று உரையீரே. (2) 8.7

கார் காலத்து எழுகின்ற* கார்முகில்காள்! * வேங்கடத்துப்–
போர் காலத்து எழுந்தருளிப்* பொருதவனுர் பேர் சொல்லி*
நீர் காலத்து எருக்கில்* அம் பழ இலை போல் வீழ்வேனை*
வார் காலத்து ஒருநாள்* தம் வாசகம் தந்தருளாரே. 8.8

மதயானை போல் எழுந்த* மாமுகில்காள்!* வேங்கடத்தைப்–
பதியாக வாழ்வீர்காள்!* பாம்பணையான் வார்த்தை என்னே*
கதியென்றும் தானுவான்* கருதாது *ஓர் பெண்கொடியை–
வதை செய்தான் என்னும் சொல்* வையகத்தார் மதியாரே. (2) 8.9

##நாகத்தின் அணையானை* நல் நுதலாள் நயந்து உரைசெய்*
மேகத்தை வேங்கடக்கோன்* விடு தூதில் விண்ணப்பம்*
போகத்தில் வழுவாத* புதுவையர்கோன் கோதைதமிழ்*
ஆகத்து வைத்துரைப்பார்* அவர் அடியார் ஆகுவரே. (2) 8.10

**ஒன்பதாம் திருமொழி**
##சிந்துரச் செம் பொடிப் போல்* திருமாலிருஞ்சோலை எங்கும்*
இந்திர கோபங்களே* எழுந்தும் பரந்திட்டன ஆல்*
மந்தரம் நாட்டி அன்று* மதுரக் கொழுஞ் சாறு கொண்ட*
சுந்தரத் தோளுடையான்* சுழலையில் நின்று உய்தும் கொலோ!* (2) 9.1

போர் களிறு பொரும் * மாலிருஞ்சோலையம் பூம் புறவில்*
தார்க் கொடி முல்லைகளும்* தவள நகை காட்டுகின்ற*
கார்க் கொள் படாக்கள் நின்று* கழறிச் சிரிக்கத் தரியேன்*
ஆர்க்கு இடுகோ? தோழி!* அவன் தார் செய்த பூசலையே. 9.2

கருவிளை ஒண் மலர்காள்!* காயாமலர் காள்*
திருமால் உருவொளி காட்டுகின்றீர்* எனக்கு உய் வழக்கு ஒன்று உரையீர்*
திரு விளையாடு திண் தோள்* திருமாலிருஞ் சோலை நம்பி*
வரி வளையில் புகுந்து* வந்தி பற்றும் வழக்கு உளதே. 9.3

பைம் பொழில் வாழ் குயில்காள்! மயில்காள்!* ஒண் கருவிளைகாள்*
வம்பக் களங் கனிகாள்!* வண்ணப் பூவை நறுமலர்காள்*
ஐம்பெரும் பாதகர்காள்!* அணி மாலிருஞ்சோலை நின்ற*
எம்பெருமானுடைய நிறம்* உங்களுக்கு என் செய்வதே?* 9.4

துங்க மலர்ப் பொழில் சூழ்* திருமாலிருஞ்சோலை நின்ற*
செங்கண் கருமுகிலின்* திருவுருப் போல்*
மலர் மேல் தொங்கிய வண்டு இனங்காள்!* தொகு பூஞ் சுனைகாள்!*
சுனையில் தங்கு செந்தாமரைகாள்!* எனக்கு ஓர் சரண் சாற்றுமினே. 9.5

##நாறு நறும் பொழில்* மாலிருஞ்சோலை நம்பிக்கு*
நான் நூறு தடாவில் வெண்ணெய்* வாய் நேர்ந்து பராவி வைத்தேன்*
நூறு தடா நிறைந்த* அக்கார வடிசில் சொன்னேன்*
ஏறு திருவுடையான்* இன்று வந்து இவை கொள்ளுங் கொலோ! (2) 9.6

இன்று வந்து இத்தனையும்* அமுது செய்திடப்பெறில்*
நான் ஒன்று நூறுயிரமாக் கொடுத்து* பின்னும் ஆளும் செய்வன்*
தென்றல் மணங்கமழும்* திருமாலிருஞ்சோலை தன்னுள் நின்றபிரான்*
அடியேன் மனத்தே* வந்து நேர் படிலே. 9.7

காலை எழுந்திருந்து* கரிய குருவிக் கணங்கள்*
மாலின் வரவு சொல்லி* மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ*
சோலைமலைப் பெருமான்* துவராபதி எம்பெருமான்*
ஆலின் இலைப் பெருமான்* அவன் வார்த்தை உரைக்கின்றதே. 9.8

கோங்கு அலரும் பொழில்* மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல்*
தூங்கு பொன் மாலைகளோடு* உடனுய் நின்று தூங்குகின்றேன்*
பூங் கொள் திருமுகத்து* மடுத்து ஊதிய சங்கொலியும்*
சார்ங்க வில் நாணொலியும்* தலைப் பெய்வது எஞ்ஞான்று கொலோ! 9.9

##சங்தொடு கார் அகிலும் சுமந்து* தடங்கள் பொருது*
வந்து இழியும் சிலம்பாறு உடை* மாலிருஞ்சோலை நின்ற சுந்தரனை*
சுரும்பார் குழல் கோதை* தொகுத்து உரைத்த*
செந்தமிழ் பத்தும் வல்லார்* திருமாலடி சேர்வர்களே. (2) 9.10

**பத்தாம் திருமொழி**

##கார்க் கோடல் பூக்காள்! * கார்க் கடல் வண்ணன் என் மேல்* உம்மைப்–
போர்க் கோலம் செய்து* போர விடுத்தவன் எங்குற்றுன்?*
ஆர்க்கோ இனி நாம்* பூசல் இடுவது?* அணி துழாய்த்–
தார்க்கு ஓடும் நெஞ்சந் தன்னை* படைக்க வல்லேன் அந்தோ!* (2) 10.1

மேல் தோன்றிப் பூக்காள்!* மேல் உலகங்களின் மீதுபோய்*
மேல் தோன்றும் சோதி * வேத முதல்வர் வலங்கையில்*
மேல் தோன்றும் ஆழியின்* வெஞ்சுடர் போலச் சுடாது*
எம்மை மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து* வைத்து கொள்கிற்றிரே. 10.2

கோவை மணாட்டி!* நீ உன் கொழுங் கனி கொண்டு*
எம்மை ஆவி தொலைவியேல்* வாயழகர் தம்மை அஞ்சுதும்*
பாவியேன் தோன்றி* பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல்*
நாவும் இரண்டு உள ஆய்த்து* நாண் இலியேனுக்கே. 10.3

முல்லைப் பிராட்டி!* நீ உன் முறுவல்கள் கொண்டு* எம்மை–
அல்லல் விளைவியேல் * ஆழி நங்காய்! உன் அடைக்கலம்*
கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட* குமரனுர்–
சொல்லும் பொய்யானல்* நானும் பிறந்தமை பொய்யன்றே. 10.4

பாடும் குயில்காள்!* ஈது என்ன பாடல்?* நல்வேங்கட–
நாடர் நமக்கு ஒருவாழ்வு தந்தால்* வந்து பாடுமின்*
ஆடும் கருளக் கொடி உடையார்* வந்து அருள் செய்து*
கூடுவர் ஆயிடில்* கூவி நும் பாட்டுகள் கேட்டுமே. 5

கண மா மயில்காள்!* கண்ணபிரான் திருக்கோலம் போன்று*
அணி மா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு* அடி வீழ்கின்றேன்*
பணம் ஆடு அரவணை* பற்பல காலமும் பள்ளிகொள்*
மணவாளர் நம்மை வைத்த பரிசு* இது காண்மினே. 10.6

நடமாடித் தோகை விரிக்கின்ற* மாமயில் காள்*
உம்மை நடமாட்டங் காண* பாவியேன் நான் ஓர் முதல் இலேன்*
குடமாடு கூத்தன்* கோவிந்தன் கோமிறை செய்து*
எம்மை உடைமாடு கொண்டான் * உங்களுக்கு இனி ஒன்று போதுமே? 10.7

மழையே! மழையே! மண்புறம் பூசி* உள்ளாய் நின்று *
மெழுகு ஊற்றினாற் போல்* ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற*
அழகப் பிரானார் தம்மை* என் நெஞ்சத்து அகப்பட தழுவ நின்று*
என்னைத் ததைத்துக் கொண்டு* ஊற்றவும் வல்லையே? 10.8

கடலே! கடலே! உன்னைக் கடைந்து* கலக்குறுத்து*
உடலுள் புகுந்து* நின்று ஊறல் அறுத்தவற்கு*
என்னையும் உடலுள் புகுந்து* நின்று ஊறல் அறுக்கின்ற மாயற்கு* என்—
நடலைகள் எல்லாம்* நாகணைக்கே சென்று உரைத்தியே? 10.9

##நல்ல என் தோழி!* நாக அணைமிசை நம் பரர்*
செல்வர் பெரியர்* சிறுமானிடவர் நாம் செய்வதென்?*
வில்லி புதுவை* விட்டு சித்தர் தங்கள் தேவரை*
வல்ல பரிசு வருவிப்பரேல்* அது காண்டுமே. (2) 10.10

**பதினொன்றும் திருமொழி**

##தாம் உகக்கும் தம் கையில்* சங்கமே போலாவோ*
யாம் உகக்கும் எங் கையில்* சங்கமும் ஏந்து இழையீர்!*
தீ முகத்து நாகணைமேல்* சேரும் திருவரங்கர்*
ஆ!முகத்தை நோக்கார் ஆல்* அம்மனே! அம்மனே! (2) 11.1

எழிலுடைய அம்மனைமீர்!* என்னரங்கத்து இன்னமுதர்*
குழலழகர் வாயழகர்* கண்ணழகர்*
கொப்பூழில் எழு கமலப் பூவழகர்* எம்மானார்*
என்னுடைய கழல் வளையைத் தாமும்* கழல்வளையே ஆக்கினரே. 11.2

##பொங்கு ஓதம் சூழ்ந்த* புவனியும் விண் உலகும்*
அங்கு ஆதும் சோராமே* ஆள்கின்ற எம்பெருமான்*
செங்கோலுடைய* திருவரங்கச் செல்வனார்*
எங்கோல் வளையால் *இடர் தீர்வர் ஆகாதே? (2) 11.

மச்சணி மாட* மதிளரங்கர் வாமனனார்*
பச்சைப் பசுந்தேவர்* தாம் பண்டு நீரேற்ற*
பிச்சைக் குறையாகி* என்னுடைய பெய் வளைமேல்*
இச்சை உடையரேல்* இத்தெருவே போதாரே? 11.4

பொல்லாக் குறளுருவாய்* பொற் கையில் நீர் ஏற்று*
எல்லா உலகும்* அளந்து கொண்ட எம்பெருமான்*
நல்லார்கள் வாழும்* நளிர் அரங்க நாகணையான்*
இல்லாதோம் கைப்பொருளும்* எய்துவான் ஒத்து உளனே. 11.5

கைப் பொருள்கள் முன்னமே* கைக் கொண்டார்*
காவிரி நீர் செய்ப் புரள ஓடும்* திருவரங்கச் செல்வனார்*
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும்* எய்தாது*
நான் மறையின் சொற் பொருளாய் நின்றார்* என் மெய்ப் பொருளும் கொண்டாரே. 11.6

உண்ணாது உறங்காது* ஒலிகடலை ஊடறுத்து*
பெண்ணாக்கை ஆப்புண்டு* தாமுற்ற பேதெல்லாம்*
திண்ணார் மதிள்சூழ்* திருவரங்கச் செல்வனார்*
எண்ணாதே தம்முடைய* நன்மைகளே எண்ணுவரே. 11.7

##பாசி தூர்த்துக் கிடந்த* பார் மகட்கு*
பண்டொரு நாள் மாசுடம்பில் நீர்வாரா* மானமிலாப் பன்றியாம்*
தேசுடைய தேவர்* திருவரங்கச் செல்வனார்*
பேசி இருப்பனகள்* பேர்க்கவும் பேராவே. (2) 11.8

கண்ணாலங் கோடித்து* கன்னி தன்னைக் கைப்பிடிப்பான்*
திண்ணார்ந்து இருந்த* சிசுபாலன் தேசழிந்து*
அண்ணாந்து இருக்கவே* ஆங்கவளைக் கைப்பிடித்த*
பெண்ணாளன் பேணும் ஊர்* பேரும் அரங்கமே. 11.9

செம்மை உடைய* திருவரங்கர் தாம் பணித்த*
மெய்ம்மைப் பெரு வார்த்தை* விட்டுசித்தர் கேட்டிருப்பர்*
தம்மை உகப்பாரை* தாமுகப்பர் என்னும் சொல்*
தம்மிடையே பொய்யானால்* சாதிப்பார் ஆர் இனியே! (2) 11.10

**பன்னிரண்டாம் திருமொழி**
மற்று இருந்தீர்கட்கு அறியலாகா* மாதவன் என்பதோர் அன்புதன்னை*
உற்று இருந்தேனுக்கு உரைப்பதெல்லாம்* ஊமையரோடு செவிடர் வார்த்தை*
பெற்று இருந்தாளை ஒழியவே போய்* பேர்த்து ஒரு தாயில் வளர்ந்த நம்பி*
மல் பொருந்தாமல் களமடைந்த* மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின். (2) 12.1

நாணி இனியோர் கருமமில்லை* நால் அயலாரும் அறிந்தொழிந்தார்*
பாணியாது என்னை மருந்து செய்து* பண்டு பண்டாக்க உறுதிர் ஆகில்*
மாணியுருவாய் உலகளந்த* மாயனைக் காணில் தலை மறியும்*
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்* ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின். 12.2

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க* தனி வழி போயினாள்!' என்னும் சொல்லு*
வந்த பின்னைப் பழிகாப்பு அரிது* மாயவன் வந்து உருக்காட்டுகின்றான்*
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்து* குறும்பு செய்வானோர் மகனைப்பெற்ற*
நந்தகோபாலன் கடைத்தலைக்கே* நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின். 12.3

அங் கைத்தலத்து இடை ஆழிகொண்டான்* அவன் முகத்தன்றி விழியேன் என்று*
செங் கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்து* சிறுமானிடவரைக் காணில் நாணும்*
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர்* கோவிந்தனுக்கு அல்லால் வாயில் போகா*
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்* யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின். 12.4

ஆர்க்கும் என்னோய் இது அறியலாகாது* அம்மனைமீர்! துழதிப்படாதே*
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன்* கைகண்ட யோகம் தடவத் தீரும்*
நீர்க்கரை நின்ற கடம்பை ஏறி* காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து*
போர்க்களமாக நிருத்தம் செய்த* பொய்கைக் கரைக்கு என்னை உய்த்திடுமின். 12.5

கார்த் தண்முகிலும் கருவிளையும்* காயா மலரும் கமலப்பூவும்*
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு* இருடீகேசன் பக்கல் போகேயென்று*
வேர்த்துப் பசித்து வயிறு அசைந்து* வேண்டு அடிசில் உண்ணும் போது*
ஈதென்று பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும்* பத்த விலோசனத்து உய்த்திடுமின். 12.6

வண்ணம் திரிவும் மனங்குழைவும்* மானமிலாமையும் வாய் வெளுப்பும்*
உண்ணல் உறுமையும் உள் மெலிவும்* ஓதநீர் வண்ணன் என்பான் ஒருவன்*
தண்ணந் துழாயென்னும் மாலை கொண்டு* சூட்டத் தணியும் பிலம்பன் தன்னைப்*
பண் அழியப் பலதேவன் வென்ற* பாண்டி வடத்து என்னை உய்த்திடுமின். 12.7

கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப்பெற்றான்* காடு வாழ் சாதியுமாகப் பெற்றான்*
பற்றி உரலிடை ஆப்புமுண்டான்* பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக் கொலோ?*
கற்றன பேசி வசவு உணாதே* காலிகள் உய்ய மழைதடுத்து*
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற* கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின். 12.8

கூட்டிலிருந்து கிளி எப்போதும்* கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்*
ஊட்டக் கொடாது செறுப்பன் ஆகில்* உலகளந்தான்! என்று உயரக்கூவும்*
நாட்டில் தலைப்பழி எய்தி* உங்கள் நன்மை இழந்து தலையிடாதே*
சூட்டு உயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்* துவராபதிக்கு என்னை உய்த்திடுமின். 12.9

##மன்னு மதுரை தொடக்கமாக* வண் துவராபதி தன்னளவும்*
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டி* தாழ்குழலாள் துணிந்த துணிவை*
பொன்னியல் மாடம் பொலிந்து தோன்றும்* புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை*
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை* ஏத்த வல்லார்க்கு இடம் வைகுந்தமே. (2) 12.10

**பதின்மூன்றாம் திருமொழி**

##கண்ணன் என்னும் கருந்தெய்வம்* காட்சி பழகிக் கிடப்பேனை*
புண்ணில் புளிப் பெய்தாற் போல்* புறநின்று அழகு பேசாத*
பெண்ணின் வருத்தம் அறியாத* பெருமான் அரையில் பீதக-
வண்ண ஆடை கொண்டு* என்னை வாட்டம் தணிய வீசீரே* (2) 13.1

பால் ஆல் இலையில் துயில்கொண்ட* பரமன் வலைப் பட்டிருந்தேனை*
வேலால் துன்னம் பெய்தாற்போல்* வேண்டிற்று எல்லாம் பேசாதே*
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்* குடந்தைக் கிடந்த குடமாடி*
நீலார் தண்ணந் துழாய் கொண்டு* என் நெறி மென் குழல் மேல் சூட்டீரே. 13.2

கஞ்சைக் காய்ந்த கருவில்லி* கடைக் கணென்னும் சிறைக் கோலால்*
நெஞ்சு ஊடுருவ ஏவுண்டு* நிலையும் தளர்ந்து நைவேனை*
அஞ்சேல் என்னான் அவனொருவன்* அவன் மார்பணிந்த வனமாலை*
வஞ்சியாதே தருமாகில்* மார்பில் கொணர்ந்து புரட்டீரே. 13.3

ஆரே உலகத்து ஆற்றுவார்* ஆயர் பாடி கவர்ந்துண்ணும்*
கார் ஏறு உழக்க உழக்குண்டு* தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை*
ஆராவமுதம் அனையான் தன்* அமுத வாயில் ஊறிய*
நீர்தான் கொணர்ந்து புலராமே* பருக்கி இளைப்பை நீக்கீரே. 13.4

அழிலும் தொழிலும் உருக்காட்டான்* அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்*
தழுவி முழுகிப் புகுந்தென்னை* சுற்றிச் சுழன்று போகானால்*
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே* நெடுமாலூதி வருகின்ற*
குழலின் தொளைவாய் நீர்கொண்டு* குளிர முகத்துத் தடவீரே. 13.5

நடையொன்றில்லா உலகத்து* நந்தகோபன் மகனென்னும்*
கொடிய கடிய திருமாலால்* குளப்புக் கூறு கொளப்பட்டு*
புடையும் பெயர கில்லேன் நான்* போட்கன் மிதித்த அடிப் பாட்டில்*
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்* போகா உயிர் என் உடம்பையே. 13.6

வெற்றிக் கருள கொடியான் தன்* மீமீது ஆடா உலகத்து*
வெற்ற வெறிதே பெற்ற தாய்* வேம்பே ஆக வளர்த்தாளே*
குற்றமற்ற முலை தன்னை* குமரன் கோலப் பணைத்தோளோடு*
அற்ற குற்றம் அவை தீர* அணைய அமுக்கிக் கட்டீரே. 13.7

உள்ளே உருகி நைவேனை* உளளோ இலளோ என்னாத*
கொள்ளை கொள்ளிக் குறும்பனை* கோவர்த்தனனைக் கண்டக்கால்*
கொள்ளும் பயன் ஒன்றில்லாத* கொங்கை தன்னைக் கிழங்கோடும்*
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில்* எறிந்து என் அழலை தீர்வேனே. 13.8

கொம்மை முலைகள் இடர் தீர* கோவிந்தற்கு ஓர் குற்றேவல்*
இம்மைப் பிறவி செய்யாதே* இனிப்போய்ச் செய்யும் தவந்தான் என்?*
செம்மை உடைய திருமார்வில்* சேர்த்தானேலும் ஒரு ஞான்று*
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி* விடை தான் தருமேல் மிக நன்றே. 13.9

##அல்லல் விளைத்த பெருமானை* ஆயர்பாடிக்கு அணி விளக்கை*
வில்லி புதுவை நகர் நம்பி* விட்டுசித்தன் வியன் கோதை*
வில்லைத் தொலைத்த புருவத்தாள்* வேட்கை உற்று மிக விரும்பும்*
சொல்லைத் துதிக்க வல்லார்கள்* துன்பக் கடலுள் துவளாரே. (2) 13.10

**பதினான்காம் திருமொழி**
##பட்டி மேய்ந்து ஓர் காரேறு* பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய்*
இட்டீறிட்டு விளையாடி* இங்கே போதக் கண்டீரே?*
இட்டமான பசுக்களை* இனிது மறித்து நீருட்டி*
விட்டுக் கொண்டு விளையாட* விருந்தா வனத்தே கண்டோமே. (2) 14.1

அனுங்க என்னைப் பிரிவு செய்து* ஆயர் பாடி கவர்ந்துண்ணும்*
குனுங்கு நாறிக் குட்டேற்றை* கோவர்த்தனனைக் கண்டீரே?*
கணங்களோடு மின் மேகம்* கலந்தாற் போல் வனமாலை*
மினுங்க நின்று விளையாட* விருந்தா வனத்தே கண்டோமே. 14.2

மாலாய்ப் பிறந்த நம்பியை* மாலே செய்யும் மணாளனை*
ஏலாப் பொய்கள் உரைப்பானை* இங்கே போதக் கண்டீரே?*
மேலால் பரந்த வெயில் காப்பான்* வினதை சிறுவன் சிறகு என்னும்*
மேலாப்பின் கீழ் வருவானை* விருந்தா வனத்தே கண்டோமே. 14.3

கார்த்தண் கமலக் கண்ணென்னும்* நெடுங் கயிறு படுத்தி* என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்* ஈசன் தன்னைக் கண்டீரே?*
போர்த்த முத்தின் குப்பாய* புகர்மால் யானைக் கன்றே போல்*
வேர்த்து நின்று விளையாட* விருந்தா வனத்தே கண்டோமே. 14.4

##மாதவன் என் மணியினை* வலையில் பிழைத்த பன்றி போல்*
ஏதும் ஒன்றும் கொளத் தாரா* ஈசன் தன்னைக் கண்டீரே?*
பீதகவாடை உடை தாழ* பெருங் கார்மேகக் கன்றே போல்*
வீதி ஆர வருவானை* விருந்தா வனத்தே கண்டோமே. (2) 14.5

தருமம் அறியாக் குறும்பனை* தன் கைச் சார்ங்கம் அதுவே போல்*
புருவ வட்டம் அழகிய* பொருத்தம் இலியைக் கண்டீரே?*
உருவு கரிதாய் முகம் செய்தாய்* உதயப் பருப் பதத்தின் மேல்*
விரியும் கதிரே போல்வானை* விருந்தா வனத்தே கண்டோமே. 14.6

பொருத்த முடைய நம்பியை* புறம் போல் உள்ளும் கரியானை*
கருத்தைப் பிழைத்து நின்ற* அக்கரு மாமுகிலைக் கண்டீரே?*
அருத்தித் தாரா கணங்களால்* ஆரப் பெருகு வானம் போல்*
விருத்தம் பெரிதாய் வருவானை* விருந்தா வனத்தே கண்டோமே. 14.7

வெளிய சங்கொன்று உடையானை* பீதக வாடை உடையானை*
அளி நன்குடைய திருமாலை* ஆழியானைக் கண்டீரே?*
களிவண்டு எங்கும் கலந்தாற்போல்* கமழ் பூங்குழல்கள் தடந்தோள்மேல்*
மிளிர நின்று விளையாட* விருந்தா வனத்தே கண்டோமே. 14.8

##நாட்டைப் படையென்று அயன் முதலாத் தந்த* நளிர் மாமலர் உந்தி *
வீட்டைப் பண்ணி விளையாடும்* விமலன் தன்னைக் கண்டீரே?*
காட்டை நாடித் தேனுகனும்* களிறும் புள்ளும் உடன் மடிய*
வேட்டையாடி வருவானை* விருந்தா வனத்தே கண்டோமே. (2) 14.9

##பருந் தாள் களிற்றுக்கு அருள் செய்த* பரமன் தன்னை*
பாரின் மேல் விருந்தாவனத்தே கண்டமை* விட்டுசித்தன் கோதைசொல்*
மருந்தாம் என்று தம் மனத்தே* வைத்துக் கொண்டு வாழ்வார்கள்*
பெருந் தாளுடைய பிரானடிக்கீழ்* பிரியாது என்றும் இருப்பாரே. (2) 14.10

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்